தன்மையோடு அந்தப் பத்திரிகைகளுக்கு இடம் கொடுத்திருக்கிறேன். இந்த அவையைக் குறைத்து எழுதக்கூடிய பத்திரிகைகளும் அமர்ந்திருக்கின்றன. குறைத்து எழுதக்கூடிய பத்திரிகைகளுக்கு நிருபர்களாக இருக்கிறவர்களும் அமர்ந்திருக்கிறார்கள். அதைக் கொண்டு வாழ்கிறவர்களும் இந்த நாட்டில் இருந்துகொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவரவர்களே இங்கே விவாதம் செய்யக்கூடாது என்று சொல்லியும் அதற்குப் பிறகு விளக்கம் அளித்தும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தற்காலிகத் தலைவர் நாஞ்சிலார் அவர்கள்—அவர் சொன்னதால் சொல்கிறேன், நம்மைப் பொறுத்தவரையில் தலைவர்தான்—வெளியே போகலாமா? அவருடைய உள் மனமே இதை ஏற்றுக்கொள்கிறதா? அவரை எவ்வளவு அந்தப் பத்திரிகை விமர்சனம் செய்தது என்பதைப் பற்றி கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கக்கூடாதா என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அதை வைத்தே சொல்லவில்லை. நீங்கள் அமருங்கள்.

திரு. கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளக்கம் என்ற பெயரால் குழப்பத்தைத் தரக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாஞ்சிலார் அவர்கள் அமர்வது நல்லது.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் வெளியேறினர்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கருத்துக்களை சொல்லிவிட்டு வெளியேறிய காரணத்தினால் பரிமாறிய கருத்துக்கள் அத்தனையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. இத்தனை நேரமும் விவாதம் தேவையில்லை. (குறுக்கீடு) உங்களை அனுமதிக்க வேண்டும் என்றுதான் அனுமதித்தேன். ஆனால் இந்த விவாதம் பலன் அளிக்காமல் போய்விட்டது. இனிமேல் அது தேவையில்லை. (குறுக்கீடு) இருப்பது நல்லது என்கிறீர்கள். இருக்கட்டும்.

(ஈ) சில ஹோட்டல்களில் உணவுப்பண்டங்களின் விலையைக் குறைக்காதது.

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையில் பதில் அளிக்கின்றபோது டாக்டர் நாவலர் அவர்கள் ஓட்டல்களுக்கு விதிக்கப்பட்டிருந்த விற்பனை வரியை ரத்து செய்வது சம்பந்தமாக ரத்து செய்து

விட்டோம் என்று சொல்லிவிட்டு, ஓட்டல்களில் இட்லி போன்ற உணவுப் பண்டங்களைப் பழைய விலைக்கே விற்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கின்றார்கள். ஆனால் தமிழகத்திலே பல ஓட்டல்களில் ஏற்றிய விலையைக் குறைக்காமல் இருக்கின்றார்களே அது சம்பந்தமாக அரசு என்ன நடவடிக்கை எடுக்கிறது என்று அறிய விரும்புகிறேன்-

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் கருத்தைத் தெளிவாக இங்கே மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். ஓட்டல் உரிமையாளர்கள் சங்கமும் விளம்பரத்தின் மூலமாகவும் அறிக்கைகளின் மூலமாகவும் கேட்டுக் கொண்டுள்ளது. அப்படி யிருந்தும் அதிக விலைக்கு விற்கிறார்கள் என்ற தகவல் இருந்தால் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அதை அரசின் கவனத் திற்குக் கொண்டுவர முழு உரிமையுண்டு, அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

(உ) பேரவை நடவடிக்கைகளின் சுருக்க வெளியீட்டிலுள்ள குறிப்பு.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று வணிகவரி மானியத்திலே என்னால் கொடுக்கப் பட்ட வெட்டுத் தீர்மானம் அவையிலே குரல் வோட்டில் நிராகரிக்கப்பட்டது. சுருக்க வெளியீட்டிலே நான் வாபஸ் பெற்றதாக இருக்கிறது. அதைத் திருத்தியமைக்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது கவனிக்கப்படும்.

3. கவன ஈர்ப்பு.

(அ) ஆழ்துளைக்குழாய்க் கிணறுகள் அமைக்க கடைப்பிடிக்கப்படும் விதிமுறைகள்.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''வறட்சிப் பகுதிகளில் புதியதாக குழாய்க் கிணறு அமைக்க, அவ்விடத்தில் 500 பேர் மக்கள் தொகையும் மற்றும் புதியதாக அமைக்கும் குழாய்க் கிணறுகளுக்கிடையே 1 கி.மீட்டர் தொலைவும் இருக்கவேண்டும் என்ற விதிமுறையைக் கடைப் பிடிப்பதால் வறட்சிப் பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்கள் குடி நீருக்கு இன்னல்படுவது'' குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்,

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :